**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், பழனி**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் நாள் திங்கள்கிழமை**

**மோ.வா.வி.கோ.மனு எண்.199/2019**
**[TNDG07 – 000841 - 2019]**

R.பிரமானந்தன் --- மனுதாரர்

எதிர்

ராமசாமி --- எதிர்மனுதாரர்

இந்த மனுவானது இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்து, என் முன்னர் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் M.மணிக்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு விசாரணைக்கு ஏற்கனவே போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்று இம்மனுவானது விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் அழைக்கப்பட்டு ஆஜராகாததால், இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரருக்கு எதிர்மனுதாரரை இழப்பீட்டுத் தொகையாக ரூ.10,00,000/—ஐ 12% வட்டியுடன் சேர்த்து எதிர்மனுதாரை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும், இம்மனுவின் செலவு தொகையினை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் இயக்கூர்தி 140, 141, 142, 163(எ), 163(பி), 166 மற்றும் 182(எ) தமிழ்நாடு இயக்கூர்தி விபத்து கோருரிமை தீர்ப்பாணை விதிகள் 1989 விதி 3(1)—ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு விசாரணைக்கு மனுதாரருக்கு ஏற்கனவே போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்று இம்மனுவானது விசாரணைக்கு

வந்தபோது, மனுதாரர் அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. எனவே, இம்மனுவானது மனுதாரரின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு இன்று 10.03.2025ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.04.01 17:28:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.